**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 31.12.2020–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு சாதாரணக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி,
நாள் : **28.12.2020**

தனி அலுவலர்,
இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

(1) இராசிபுரம் நகராட்சிக்கு பாத்தியப்பட்ட கீழ்க்காணும் பட்டியலில் இடம் பெற்றுள்ள குத்தகை இனங்களின் வரிசை எண்.1 முதல் வரிசை எண்.12 வரையிலான இனங்களுக்கு சுங்கம் அல்லது கட்டணம் வசூலிக்கும் உரிமைகளுக்கு 2021–22 முதல் 2023–24 முடியவுள்ள மூன்றாண்டு தொகுப்பு காலம் அல்லது ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகள் முடியவுள்ள காலத்திற்கு முதலாமாண்டு உரிய தொகையில் 5% உயர்வு செய்து இரண்டாமாண்டிற்கும், இரண்டாமாண்டு உரிய தொகையில் 5% உயர்வு செய்து மூன்றாமாண்டிற்கும் சுங்கம் அல்லது கட்டணம் வசூலிக்கும் உரிமையை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில் நகராட்சி ஆணையாளர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் பகிரங்கமாக பொது ஏலம் நடைபெறும். ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே இனங்களுக்கு எதிரே நிர்ணயம் செய்துள்ள வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகையை ஆணையாளர், இராசிபுரம் நகராட்சி (Commissioner, Rasipuram Municipality) என்ற பெயருக்கு வங்கி வரைவோலையாக மட்டுமே எடுத்து முன்னதாக வரிசை எண்.1 முதல் வரிசை எண்.12 வரையிலான இனங்களுக்கு செலுத்தி அத்தாட்சி பெற்றுக்கொள்ள வேண்டும். வைப்புத் தொகை செலுத்த காலவரம்பு நிர்ணயிக்கவும் ஏலத் தேதியினை நிர்வாக காரணங்களுக்காக மாற்றம் செய்யவும் முழுமையாகவோ, பகுதியாகவோ ஒத்தி வைக்க ஆணையாளருக்கு முழு அதிகாரமுண்டு. ஏல நடவடிக்கையில் ஆணையாளரின் முடிவே இறுதியானதாகும். இந்த ஏலம் குறித்த விவரங்களை அலுவலக வேலை நாட்களில் பொதுப் பிரிவில் நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண் | உரிமை ஆணை விவரம் | ஏலதாரர் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை (ஒவ்வொரு இனத்திற்கும்) ரூ. | தேவையான சொத்து மதிப்பு சான்றிதழ் (ஒவ்வொரு இனத்திற்கும்) ரூ. | சொத்து மதிப்பு சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய கூடுதல் வைப்புத் தொகை (ஒவ்வொரு இனத்திற்கும்) ரூ. | ஏலம் உறுதியான பின் செலுத்த வேண்டிய குத்தகைத் தொகை (ஒவ்வொரு இனத்திற்கும்) ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | பிரதி வாரம் செவ்வாய் கிழமை வாரச் சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை | 5,00,000 | 12,00,000 | 75,000 | மொத்த ஏலத் தொகையில் முழுத் தொகை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | தினசரி சந்தையில் சுங்கம் வசூல் செய்யும் உரிமை. | 5,00,000 | 12,00,000 | 75,000 | மொத்த ஏலத் தொகையில் முழுத் தொகை |
| 3 | ஆடு அடிக்கும் தொட்டியில் வசூல் செய்யும் உரிமை மற்றும் ஸ்லாட்டர் ஹவுஸ் தினசரி மார்கெட்டில் புதியதாக கட்டப்பட்டுள்ள 15 கசாப்புக் கடைகள் கட்டண வசூல். | 1,00,000 | 4,00,000 | 40,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |
| 4 | தினசரி மார்கெட்டிலுள்ள கோழிக்கடைகள் மற்றும் மீன் கடைகள் நடத்திக் கொள்ளும் உரிமை மற்றும் நகர எல்லைக்குள் உள்ள கோழிக்கடை வைத்து வியாபாரம் செய்பவர் வசம் கட்டணம் வசூலித்தல் | 1,00,000 | 3,00,000 | 30,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |
| 5 | பேருந்து நிலையத்திற்குள் வரும் பேருந்துகள், சுங்கம் வசூல் செய்யும் உரிமை. | 1,00,000 | 7,00,000 | 40,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |
| 6 | கச்சேரி தெரு, சின்ன அக்ரஉறாரம், பட்டணம்சாலை அண்ணா சாலை போன்ற தெருக்களில் தள்ளுவண்டி மூலம் பழம், பல்பொருள் விற்பனை செய்வோரிடம் இருந்து சுங்கம் வசூலிக்கும் உரிமை. | 5,00,000 | 7,00,000 | 40,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | நகராட்சி பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமை | 1,00,000 | 75,000 | 25,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |
| 8 | புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டணக் கழிப்பிடம் ஆண்கள் கழிப்பறை 6, பெண்கள் கழிப்பறை 4, ஆண்கள் குளியல் அறைகள் 2, பெண்கள் குளியல் அறைகள் 2, ஆண்கள் சிறுநீர் கழிப்பிடம் 4 ஆகியவற்றில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 5,00,000 | 7,00,000 | 40,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |
| 9 | தினசரி மார்க்கெட்டில் உள்ள கட்டணக் கழிப்பிடம் ஆண்கள் கழிப்பறை 6, பெண்கள் கழிப்பறை 6, ஆண்கள் குளியலறை 1, பெண்கள் குளியலறை 1, ஆண்கள் சிறுநீர் கழிப்பிடம் 6 ஆகியவற்றில் கட்டணம் வசூலிக்கும் உரிமை | 1,00,000 | 5,00,000 | 40,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |
| 10 | புதிய பேருந்து நிலையத்தில் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் 23.20 மீ. X 6.20 மீ. = 143.84 ச.மீ. கொண்ட ஓட்டுக் கொட்டகை மற்றும் 23.20 மீ. X 6.50 மீ. = 150.80 ச.மீ. கொண்ட காலியிடத்தில் கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமை | 5,00,000 | 4,00,000 | 40,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11 | பழைய பேருந்து நிலையத்திலுள்ள கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமை. (குளியல் அறை, சிறுநீர், மலம் கழித்தல்) | 1,00,000 | 3,00,000 | 40,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |
| 12 | புதிய பேருந்து நிலையத்தில் பேருந்துகளில் மட்டும் தட்டில் முறுக்கு விற்பனை செய்து கொள்ளும் உரிமை. | 2,00,000 | 4,00,000 | 30,000 | ஏலத் தொகையில் முழுத் தொகை |

**அலுவலகக் குறிப்பு :**

1) ஆண்டு குத்தகை இனங்களை (12 இனங்களை) 2021–2022–ஆம் முதலாம் ஆண்டிற்கு குத்தகை நிபந்தனைகளுக்குட்பட்டு பொது ஏலமிட அனுமதிக்கலாம். அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்கு அரசாணையில் குறிப்பிட்ட நிபந்தனைகளின்படி உரிமம் புதுப்பித்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2) ஏல அறிவிக்கைகள் அச்சிடவும், அதற்காகும் உத்தேச செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3) ஏல அறிவிப்பை தினசரி நாளிதழில் ஒரு முறை விளம்பரம் செய்யவும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் அதற்கான செலவினத்தை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம். அரசாங்கம் அவ்வப்போது மாற்றும் வரித் தொகையை செலுத்த உரிமைதாரர் கடமைப்பட்டவராவார்.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 923**

அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் மூன்று தெளிப்பான் இயந்திரங்கள் (Power Sprayer) பழுது நீக்கம் செய்யவும், மூன்று spray handle brass Gun வாங்கும் பணிக்கு கடந்த 16.10.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | பழுதுகள் சரிபார்க்க ஒரு பவர் ஸ்பிரேயருக்கு | Spray handle brass Gun ஒன்றின் விலை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் | ரூ. 5264/– | ரூ. 1344/– |
| 2 | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி | ரூ. 5544/– | ரூ. 1456/– |
| 3 | ஸ்ரீ அக்ஷயா டிரேடர்ஸ், உறையூர் | ரூ. 5500/– | ரூ. 1500/– |

வ.எண். 1—இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும், நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4053/20/எச்1)

**தீர்மானம் எண். 924**

அனுமதிக்கப்பட்டது.

(3) நகராட்சிக்குச் சொந்தமான தினசரி மார்க்கெட் கடை எண். 38—ஐ திரு சிவகுமார் மற்றும் தினசரி மார்க்கெட் கடை எண். 45—ஐ திரு சம்பத் என்பவரும் குத்தகைக்கு எடுத்து நடத்தி வந்தனர். தற்போது கடையினை நடப்பு மாதம் வரை வாடகை மற்றும் ஜி.எஸ்.டி. நிலுவையின்றி செலுத்தி நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துள்ளனர். வருவாய் ஆய்வாளர் குறிப்பின்படி மேற்கண்ட தினசரி மார்க்கெட் கடை எண். 38 மற்றும் கடை எண். 45 இரண்டு கடைகளுக்கு கேட்பு நிறுத்தம் செய்யவும், பொது ஏல நடவடிக்கை தொடரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(3748/20/அ2)

**தீர்மானம் எண். 925**

அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சியில் 13 வார்டுகளிலுள்ள தெரு விளக்குகள் (1) 40 வாட்ஸ் குழல் விளக்குகள்— 526 (2) சி.எப்.எல். 36 வாட்ஸ் — 484 (3) சோடியம் ஆவி விளக்குகள் – 67 மொத்தம் — 1077 மின் விளக்குகளை பராமரிக்க, இந்நகராட்சி மன்றத் தீர்மானம் எண். 820, நாள் 28.05.2020—இன்படி 16.06.2020 வரை ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் நிறுவனத்திற்கு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது பணியின் அவசியம் கருதியும், நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாததாலும், தனியார் தெரு விளக்கு பராமரிப்பு காலத்தினை, மேலும் ஆறு மாத காலத்திற்கு 17.12.2020 முதல் 16.06.2021 வரை நீட்டிப்பு செய்து வழங்கவும், ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் விலை விகிதத்தின் அடிப்படையிலேயே தொகை வழங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 500000/— (ரூபாய் ஐந்து இலட்சம்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பராமரிப்பு கால நீட்டிப்பு அனுமதி வழங்கியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) பணியின் அத்தியாவசியத்தினைக் கருதி 13 வார்டுகள் தெரு விளக்குகள் பராமரிக்க ஸ்ரீ குமரன் எலக்ட்ரிக்கல்ஸ், சேலம் நிறுவனத்திற்கு 17.12.2020 முதல் 16.06.2021 வரை மேலும் ஆறு மாத காலம் நீட்டிப்பு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
இ) பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பராமரிப்பு கால நீட்டிப்பு செய்து ஆணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1207/2019/இ1)

**தீர்மானம் எண். 926**

அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சி பாரதிதாசன் சாலை நகராட்சி நடுநிலைப் பள்ளியில் புதிய வகுப்பறைகள் கட்டும் பணிக்கு மண் பரிசோதனை (Soil Bearing Capacity) செய்ய ஆகும் செலவினம் ரூ. 10620/– சேலம் அரசு பொறியியற் கல்லூரிக்கு வழங்க தனி அலுவலர் முன் அனுமதி பெற்று செலுத்தியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** ரூ. 10620/– மண் பரிசோதனை கட்டணம் நகராட்சி கல்வி நிதியிலிருந்து சேலம் அரசு பொறியியற் கல்லூரிக்கு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(1749/2019/இ1)

**தீர்மானம் எண். 927**

அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சியில் குடிநீர் வடிகால் நிதியின்கீழ் 27.11.2020 அன்று வெளியிட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பில் ஈப்பு வாகனம் TN 28 Q 8402-இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 11.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

1) ஸ்ரீ ஜோதி முருகன் மோட்டார் ஒர்க்ஸ், சேலம் – ரூ. 93900/– (மதிப்பீட்டைவிட அதிகம்)
2) லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் – ரூ. 89500/– (மதிப்பீட்டைவிட குறைவு)

பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள லட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணியினை குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(3328/20/இ2)

**தீர்மானம் எண். 928**

அனுமதிக்கப்பட்டது.

(7) சேலம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்களின் அறிவுரைப்படி, இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பை விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள், மழை மற்றும் குளிர் காலங்களில் கவனிக்க வேண்டியவை குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள், டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை அச்சகத்தில் அச்சடித்து குடியிருப்பு பகுதிகளிலுள்ள வீடுகளில் ஒட்டுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 5.35 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(5414/20/எச்1)

**தீர்மானம் எண். 929**

அனுமதிக்கப்பட்டது.

(8) அரசாணை எண். (2டி) 35, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA-3(2)) துறை, நாள் 15.05.2020–இல் இராசிபுரம் நகராட்சிப் பகுதியிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் நகரப் பகுதியை சுற்றியமைந்துள்ள பட்டணம், சீராப்பள்ளி, அத்தனூர் மற்றும் பிள்ளாநல்லூர் பேரூராட்சிகளில் உருவாகும் கழிவுநீரை வேறு எங்கும் வெளியேற்றாமல் கொண்டு வந்து கொட்டுமாறு ஆணையிடப்பட்டுள்ளது. அதன்படி இராசிபுரம் நகராட்சி, பட்டணம்,

பிள்ளாநல்லூர், சீராப்பள்ளி மற்றும் அத்தனூர் பேரூராட்சிகளிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. மேலும் கழிவுநீர் வாகன உரிமையாளர்களுக்கு வாகன உரிமம் வழங்க ரூ. 1000/– வசூல் செய்யவும், வாகன உரிமம் புதுப்பிக்க ரூ. 250/– வசூல் செய்யவும், கழிவுநீர் ஒரு நடை வெளியேற்ற ஆட்டோ வகையான வண்டிக்கு ரூ. 50/–ம், 3000 லிட்டர் முதல் 6000 லிட்டர் கொள்ளளவு கொண்ட வண்டிக்கு ரூ. 200/–ம் வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர் மன்ற அலுவலரின் முன் அனுமதி பெற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட அனுமதிக்கலாம்.

(5090/20/இ2)

**தீர்மானம் எண். 930**

அனுமதிக்கப்பட்டது.

( 9 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் நீர்த்த சுண்ணாம்புத் தூள், பிளிச்சிங் பவுடர், 3 லேயர் முககவசம் மற்றும் சேனிடேசர் விநியோகம் செய்யும் பணிக்கு கடந்த 17.12.2020 அன்று இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பொருட்கள் | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் (ரூ.) | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி (ரூ.) |
|---|---|---|---|
| 1) | நீர்த்த சுண்ணாம்புத் தூள் | 12.80 | 13.20 |
| 2) | பிளிச்சிங் பவுடர் | 63.00 | 64.00 |
| 3) | 3 லேயர் முககவசம் | 12.00 | 13.00 |
| 4) | சேனிடேசர் | 406.00 | 410.00 |

வரிசை எண். 1–இல் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால், அதன் ஒப்பந்ததாரர் M/s. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(455/20/எச்1)

**தீர்மானம் எண். 931**

அனுமதிக்கப்பட்டது.

( 10 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க பொது மக்களுக்கு கபசுர குடிநீர் வழங்க 10 லிட்டர் கொள்ளளவு கொண்ட சில்வர் டிரம் வாங்கும் பணிக்கு கடந்த 16.10.2020 அன்று மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒரு சில்வர் டிரம்மின் விலை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் | ரூ. 4360/– |
| 2 | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், காளப்பநாயக்கன்பட்டி | ரூ. 4424/– |
| 3 | ஸ்ரீ அக்ஷயா டிரேடர்ஸ், உறையூர் | ரூ. 4600/– |

வ.எண். 1–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ளதால், ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) அவசர அவசியம் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும், நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக ஆணை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4052/20/எச்1)

**தீர்மானம் எண். 932**

அனுமதிக்கப்பட்டது.

(11) இந்நகராட்சி பேருந்து நிலைய தகுதியினை புதுப்பிக்க, பேருந்து நிலைய ஓடு தளம் பராமரித்து வர்ணம் பூசி, கழிப்பிட பழுதுகள் சரிசெய்யும் ரூ. 400000/– மதிப்பீட்டுப் பணிக்கு 24.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

1) திரு என். செல்லப்பன், ஒப்பந்ததாரர்,
27, வி. நகர் சாலை எண். 17, இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.04% குறைவு.
2) )திரு ஜே. ரவிசந்திரன், ஒப்பந்ததாரர்,
ஆர். கவுண்டம்பாளையம், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 2.62% அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.04% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.04% குறைவான திரு என். செல்லப்பன் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4834/20/இ1)

**தீர்மானம் எண். 933**

அனுமதிக்கப்பட்டது.

(12) இந்நகராட்சி வி. நகர் நடுநிலைப் பள்ளி கிணற்றிலுள்ள மரங்களை அகற்றி பக்கவாட்டு சுவர்களை புதுப்பித்து கம்பி வலைகளுக்கு வர்ணம் பூசும் ரூ. 85000/– மதிப்பீட்டுப் பணிக்கு 24.12.2020 அன்று பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு :

1)திரு ஆர்.எஸ். ரங்கசாமி, ஒப்பந்ததாரர், காட்டூர், இராசிபுரம் – மதிப்பீட்டைவிட 0.18% குறைவு.
2)திரு ஏ. மதியழகன், ஒப்பந்ததாரர், ஆர். பட்டணம், இராசிபுரம் –மதிப்பீட்டைவிட 1.50%அதிகம்.

மதிப்பீட்டைவிட 0.18% குறைவான திரு ஆர்.எஸ். ரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 0.18% குறைவான திரு ஆர்.எஸ். ரங்கசாமி ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

(4482/20/இ1)

**தீர்மானம் எண். 934**

அனுமதிக்கப்பட்டது.

( 13 ) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகளான முககவசம், ஆசிட், பினாயில் மற்றும் நீர்த்த சுண்ணாம்புத்தூள் ஆகியவை இருப்பில் இல்லாத காரணத்தினால், இவற்றை வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ. 4.40 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்காணும் செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்து (SUC) நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(153/21/எச்1)**

**தீர்மானம் எண். 935**

அனுமதிக்கப்பட்டது.

( 14 ) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளிலுள்ள முடித்திருத்தம் / அழகு நிலையம் / ஸ்பா / மசாஜ் நிலையம் நடத்துவோர் இராசிபுரம் நகராட்சி அலுவலகத்தில் உரிமையாணை தொகை செலுத்தி தொழில் உரிமம் பெற்றுக் கொள்ளவும், அவ்வாறு தொழில் உரிமம் இன்றி செயல்படும் நிலையம் நடத்துவோரும், நிலைய உரிமையாளரை பொறுப்பானவராக கருதி நடவடிக்கை எடுக்கவும் பற்றிய செய்தியினை தினசரி நாளிதழ்களில் விளம்பரப்படுத்தவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ. 20000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றப் பொருள் வைக்கலாம்.
**2)** மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
**3)** அவசர அவசியம் கருதி, நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(5348/20/எச்1)**

**தீர்மானம் எண். 936**

அனுமதிக்கப்பட்டது.

ஒம்/– சு. பிரபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
இராசிபுரம் நகராட்சி.